GODDependence செய்தி மடல்
True freedom is being dependent on God

மே | 2026



# எல்லா மனிதருக்கும் தேவையான மெய்யான ஒளி

உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. (யோவான் 1:9)

இந்தியாவில், நம் அனுதின வாழ்வில் ஒளி என்ற வார்த்தை மிகவும் ஆழமான அர்த்தம் தருவதாக இருக்கிறது. இரவில் ஒரு கிராமத்தில் மின்தடை ஏற்படும்போது, மக்கள் உடனடியாக மெழுகுவர்த்தி, மண்ணெண்ணெய் விளக்கு அல்லது டார்ச் விளக்கைத் தேடுகிறார்கள். பண்டிகைக் காலங்களில், வீடுகள் பலவிதமான வண்ணமயமான அலங்கார விளக்குகளால் அலங்கரிக்கப்படுகின்றன, ஏனெனில் ஒளி என்பது மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் கொண்டாட்டத்தின் அடையாளமாகத் திகழ்கிறது. அதேபோல, இயேசுவே ”மெய்யான ஒளி’ என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது – அவர் ஒரே இரவுக்கு மட்டும் ஒளிரும் ஒரு பண்டிகை விளக்கோ அல்லது குறுகிய காலத்தில் அணைந்துபோகும் ஒரு சிறிய விளக்கோ அல்ல, மாறாக, பாவ இருளை அகற்றும் நித்திய ஒளியாக இயேசு இருக்கிறார்.


பரிசுத்த வேதாகமத்தின் ஆசிரியர் தேவன். அதில் உள்ள சத்தியம் மட்டுமே ஜனங்களை உண்மையான மகிழ்ச்சிக்கு வழிநடத்திச்செல்ல முடியும். - ஜார்ஜ் முல்லர்

யோவான் 1:9-இல், இயேசுவை மெய்யான ஒளி' என்று யோவான் குறிப்பிடும்போது, ஆன்மீக ரீதியாக வெளிச்சம் காண கிறிஸ்துவே ஆதாரமாகவும் ஆதிமூலமாகவும் இருக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறார். மனித ஞானம், சமய சம்பிரதாயங்கள் அல்லது நல்லொழுக்க தத்துவங்கள் போன்ற தற்காலிகமாக வெளிச்சம் தரும் ஒளிகளைப் போல இல்லாமல், இயேசு ஒருவரே தேவனை பரிபூரணமாக வெளிப்படுத்தி, மனிதகுலத்திற்கு இரட்சிப்பின் வழியைக் காட்டுகிறார்.

கிறிஸ்துவின் ஒளி உலக அளவில் பரவலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதை யோவான் 1:9 வலியுறுத்துகிறது: அவர் உலகிலுள்ள "எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி"யாக இருக்கிறார். இதன் பொருள் எதுவும் செய்யாமலேயே அனைவரும் இரட்சிக்கப்பட்டுவிடுவார்கள் என்பதல்ல, மாறாக, கிறிஸ்துவின் ஒளி ஏதாவது ஒரு வகையில் அனைவரையும் சென்றடைகிறது என்பதையே இது போதிக்கிறது. சிருஷ்டிப்பின் மூலமாகவும், மனசாட்சியின் மூலமாகவும், மற்றும் நற்செய்தி அறிவிப்பின் மூலமாகவும், சத்தியத்தை அறிந்துகொள்ளவும் தேவனைத் தேடவும் போதுமான ஒளியை அவர் மனிதர்களுக்கு எப்பொழுதும் வழங்குகிறார். ஆயினும், யோவான் எழுதுவது போல, அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை அதிகமாக விரும்புகிறபடியால், அனேகர் இந்த ஒளியை நிராகரித்தனர் (யோவான் 3:19).

இயேசு இந்த உலகிற்கு ஒரு மனிதனாக வந்த நிகழ்வானது, மனிதகுலத்தின் ஆழமான இருளுக்கு தேவன் தந்த பதிலாக இருக்கிறது. ஜனங்கள் செல்வம், அதிகாரம், மதம் மற்றும் அறிவு ஆகியவற்றில் வாழ்வின் பொருளைத் தேடுகிறார்கள், ஆயினும், கிறிஸ்து அவர்களுடைய வாழ்வில் இல்லாதபடியால் அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் வழிதவறியவர்களாகவே இன்னமும் இருக்கிறார்கள்.

இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு, யோவான் 1:9 ஒரு பக்கம் ஆறுதலளிக்கிறதாகவும் அதே வேளையில் ஒரு சவாலை முன்வைக்கிறதாகவும் இருக்கிறது. கிறிஸ்துவின் ஒளி நமது வாழ்வில் உள்ள இருளைப் போக்கப் போதுமானதாக இருப்பதால், அது நமக்கு ஆறுதல் அளிக்கிறது. யோவான் ஸ்நானகனைப் போலவே, நாமும் அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்–அதன் மூலம் இயேசுவை அறியாதவர்கள் அவரை அறிந்துகொள்ள முடியும்–என்பதால், இது நமக்கு முன் ஒரு சவாலை முன் வைக்கிறது.

இயேசுவானவர் மனித இருதயத்தின் இருளை அகற்றி என்றென்றும் பிரகாசமாக்கக்கூடிய "மெய்யான ஒளி' ஆவார்.

**-சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூரு.**

நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன். - சங்கீதம் 119:11

# ஆசிரியரிடமிருந்து....

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ளவும் தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஏப்ரல் 2026ல் இந்தியாவின் 5 மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள் வெளியாகி, புதிய அரசுகள் அமைக்கப்பட்டுள்ளன. புதிதாய் அமைந்த அரசுகள் நாம் விரும்பியதாகவோ எதிர்பார்த்ததாகவோ இருந்தாலும் இல்லாவிட்டாலும் புதிய அரசுகளுக்காக ஆட்சியாளர்களுக்காக ஜெபிப்பது கிறிஸ்தவர்களாக நமது கடமை. இன்னும் அவற்றில் நமது பொறுப்புக்கள் என்ன என்பதை ரோமர் 13:1-7 வசனங்கள் கிறிஸ்தவர்களுக்கு தெளிவான வழிகாட்டுதலைத் தருகிறது.

### 1. தேவனால் நியமிக்கப்பட்ட அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல்

ரோமர் 13:1 "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்" என்று கட்டளையிடுகிறது. இங்கு 'எந்த மனுஷனும்' என்பது விசுவாசிகளையும், அவிசுவாசிகளையும் உள்ளடக்கிய அனைத்து மனிதர்களையும் குறிக்கும். அதிகாரிகள் தேவனால் நியமிக்கப்படுகிறார்கள் என்பதால், ஒரு கிறிஸ்தவன் அரசாங்கத்தை எதிர்ப்பது தேவனின் ஏற்பாட்டையே எதிர்ப்பதாகும்.

எனவே, மே 2026 ல் அமைந்த புதிய அரசுகள் - அது நாம் விரும்பிய கட்சிகளின் ஆட்சியாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி - அது தேவனுடைய இறையாண்மையின் கீழ் வந்தடைந்துள்ளது. இதை நாம் விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இத்தகைய கீழ்ப்படிதலுக்கும் ஒரு வரையறை உண்டு. அதிகாரிகள் தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கும், வேதாகமத்தின் நியாயப்பிரமாணங்களுக்கும் எதிராகக் கட்டளை பிறப்பிக்கும்போது, அவர்களுக்குக் கீழ்ப்படிவதை விட தேவனுக்குக் கீழ்ப்படிவதே நமது முதலாவது கடமை (அப். 5:29). உதாரணமாக, விக்கிரக ஆராதனையில் பங்குகொள்ளவோ, பொய் சாட்சி சொல்லவோ, அல்லது நற்செய்தி பிரசங்கிப்பதை நிறுத்தவோ அரசு கட்டளையிட்டால், கிறிஸ்தவர்கள் 'தேவனுக்குக் கீழ்ப்படிதல்' என்ற உன்னதக் கொள்கைக்குக் கட்டுப்பட்டு, மனித அதிகாரத்தை மறுக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட எதிர்ப்பும் மரியாதையோடும், அமைதியான முறையிலும், தேவனுக்கு மகிமை தரும் விதமாகவும் இருக்க வேண்டும்.

### 2. அதிகாரிகளுக்காக ஜெபித்தலும், மரியாதை செலுத்தலும்

ரோமர் 13:7 " எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள் " என்று கூறுகிறது. புதிதாகப் பதவியேற்றுள்ள முதலமைச்சர்கள் மற்றும் மாநில அமைச்சர்களுக்கு உரிய 'கனம்'

ஜெபியுங்கள், வாசியுங்கள், வாசித்து ஜெபியுங்கள்; ஏனென்றால், மனிதர்களிடமிருந்து வரும் அதிகத்தைக் காட்டிலும் தேவனிடமிருந்து வரும் கொஞ்சமே நல்லது. - ஜான் பன்யன்

செலுத்துவது என்பது அவர்களை ஆளுமைப்படுத்தும் தேவனின் கருவிகளாக மதிப்பதாகும். நாம் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை முறையை அல்லது அரசியல் கொள்கைகளை ஒப்புக் கொள்ளாவிட்டாலும், அவர்கள் வகிக்கும் பதவிக்குரிய மரியாதையை நாம் தர வேண்டும். இதில் அவர்களுக்காக நாம் ஜெபிப்பதும் அடங்கும். 1 தீமோத்தேயு 2:1-2 நமக்கு நினைவூட்டுகிறது: ”ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும். விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.” நாம் விரும்பாத அரசாக இருந்தால், அதற்காக இன்னும் அதிகமாக ஜெபிக்க வேண்டியது தான்.

அமைச்சர்களுக்காக மற்றும் அதிகாரி களுக்காக ஜெபிக்கும் போது நாம் என்ன வேண்டிக்கொள்ள வேண்டும்? அவர்கள் ஞானமாக ஆட்சிசெய்யவும், நீதியை நிலைநாட்டவும், சமாதானத்தைப் பேணவும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கவும், விசுவாச சுதந்திரத்தை மதிக்கவும் வேண்டிக் கொள்ள வேண்டும். மேலும், அவர்களுடைய இருதயங்கள் கர்த்தரால் திருப்பப்படவேண்டும் என்று ஜெபிக்கலாம் (நீதிமொழிகள் 21:1). மிக முக்கியமாக, நமது ஜெபங்கள் உண்மையான அக்கறையோடும், கிறிஸ்துவின் அன்போடும் இருக்க வேண்டும். இத்தகைய ஜெபங்களே சமுதாயத்தில் சமாதானத்தையும், சுவிசேஷத்திற்கான வாய்ப்புகளையும் உருவாக்கும்.

### 3. நன்மை செய்தல் மற்றும் வரி செலுத்துதல்

ரோமர் 13:3 ”அதிகாரிகள் நற் கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள், ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால், நன்மை செய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும்.” என்கிறது. இதன் பொருள், ஒரு கிறிஸ்தவன் சமூகத்தில் ஒரு முன்மாதிரியான குடிமகனாக வாழும்போது, அரசாங்கத்திடமிருந்து அவனுக்குக் கிடைப்பது தண்டனையல்ல, மாறாகப் பாராட்டும் பாதுகாப்புமே ஆகும். எனவே, நாம் நோயுற்றோரைக் கவனித்தல், தரித்திரருக்கு உதவுதல், நேர்மையாக வியாபாரம் செய்தல், சமூகத்தில் சமாதானத்தைக் நிலைநாட்டுதல் போன்ற நற்செயல்களில் முன்னணியில் இருக்க வேண்டும். இவ்வாறு நாம் நன்மை செய்யும்போது, அது அரசாங்கத்திற்கு ஒரு ஆசீர்வாதமாகவும், நற்செய்திக்கு ஒரு கதவாகவும் மாறும்.

”எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்.” (ரோமர் 13:7). வரி செலுத்துவது என்பது வெறும் சட்டப்பூர்வக் கடமை மட்டுமல்ல, அது தேவனுக்குக் கீழ்ப்படிதலின் ஒரு அங்கமாகும். ஏனெனில், வரிகளின் மூலமாகவே அரசாங்கம் தனது கடமைகளை - சாலைகள், மருத்துவமனைகள், பாதுகாப்பு, கல்வி - நிறைவேற்றுகிறது. வரி ஏய்ப்பு செய்வதோ, லஞ்சம் கொடுப்பதோ, கறுப்புப்பணம் வைத்திருப்பதோ ஒரு கிறிஸ்தவனுக்குப் பொருந்தாது. மாறாக, நேர்மையாக வரி செலுத்துவதன் மூலம் நாம் சமூகத்தின் நன்மைக்காக திட்டங்களில் பங்களிப்பதோடு, நாம் ’கிறிஸ்துவின் சாட்சிகள்’ என்பதை நிரூபிக்கிறோம்.

புதிய அரசாக நமக்குப் பிடித்த கட்சி ஆட்சிக்கு வந்திருந்தாலும் வராதிருந்தாலும்,

கிறிஸ்தவர்களாக நமது பணி என்பது மாறாதது. அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல், அதிகாரிகளுக்காக ஜெபித்தல், நன்மை செய்தல், வரி செலுத்துதல் ஆகியவற்றின் மூலம் இறுதியில் தேவனுக்கு மகிமை சேர்ப்பதே நமது தலையாய கடமை. இவ்வாறு நடக்கும்போது, நாம் தேவ இராஜ்யத்தின் குடிமக்களாகவும், பூமியின் நல்ல குடிமக்களாகவும் வாழ்ந்து, சமுதாயத்தில் உப்பும் வெளிச்சமுமாய் இருப்போம்.

ஏப்ரல் 25 & 26 அன்று நடைபெற்ற ”வேதாகமத்தை தியானித்தல்: ஏன் எப்போது எப்படி?” என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் (Talk Show) கலந்துகொண்டு பயன்பெற்றவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இதன் தொடர்ச்சியாக இந்த மாதத்திற்கான கருத்தரங்கும் பல்வேறு வேத தியான முறைகளை விளக்கும் ஒரு நிகழ்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, வரும் நாட்களில் வேத தியான (Bible Meditation) குழுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஏப்ரல் 25 அன்று தெலுங்கு மொழியில் நடைபெற்ற 4 மணிநேர தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த மாதத்தில் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு என மூன்று மொழிகளிலும் தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

மாதந்தோறும் வெளிவரும் நமது செய்திமடல்களை நீங்கள் தவறாமல் வாசிப்பீர்கள் என நம்புகிறோம். இந்த செய்திமடல்கள் அதன் உள்ளடக்கங்கள் குறித்த உங்கள் கருத்துக்களை அவ்வப்போது எங்களுக்கு தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**



## நமது தரிசனம் & நமது பணித்திட்டம்

**நமது தரிசனம்**

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

**நமது பணித்திட்டம்**

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், மற்றும் தொழில் அதிபர்கள் உடனான சந்திப்புகளை தவிர்க்காதபடிக்கு அதற்காக கடுமையாக முயற்சிசெய்கிறோம். ஆனால், தேவனுடனான சந்திப்பு மற்றும் வேதாகமத்தை வாசித்து ஆராய்தல் ஆகியவற்றை ஒத்திப்போடுவதைக் குறித்து நாம் யோசிப்பதே இல்லை. - கார்லோஸ் E. ஆசே

# துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - மே 2026

## துதிப்போம்:

1. 2026 ஏப்ரல் மாதத்தில் தங்களுடைய வேதவாசிப்பை நிறைவு செய்த ஒவ்வொருவருக்காகவும் தேவனைத் துதிப்போம்.

2. 2026 ஏப்ரல் 25, 26 தேதிகளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ”வேதாகமத்தைத் தியானித்தல்: ஏன், எப்போது, எப்படி” என்ற தலைப்பில் GODependence கருத்தரங்கு சிறப்பாக நடைபெறவும், அநேகருக்குப் பயனுள்ளதாக அமையவும் ஆண்டவர் உதவியதற்காக நன்றி செலுத்துவோம்.

3. 2026 ஏப்ரல் 25 அன்று 4 மணிநேர Telugu Bible Readathon-இல் உற்சாகமாய்க் கலந்துகொண்டு வேதத்தை வாசித்த அனைவருக்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

4. 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் நமது பிள்ளைகள் பெற்ற நல்ல மதிப்பெண்களுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

5. 2026 மே மாத வேதவாசிப்புக் குழுக்கள் சில தடைகளையும் தாண்டி ஆரம்பிக்கப்படவும், அநேகர் அவற்றில் இணைந்து தங்கள் வேதவாசிப்பைத் துவங்கியதற்காகவும் ஆண்டவருக்கு துதி செலுத்துவோம்.

## ஜெபிப்போம்:

1. 2026 மே மாத வேதவாசிப்புக் குழுக்களில் இணைந்து வேதாகமத்தை வாசிக்கிறவர்கள், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தங்கள் வாசிப்பை முழுமையாக நிறைவுசெய்ய ஜெபிப்போம்.

2. 10-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு முடிவுகளுக்காக ஜெபிப்போம். 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் வெற்றிபெற்று, உயர்கல்வியில் இணைய ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் பிள்ளைகள், தாங்கள் விரும்பிய படிப்பில் இணைந்து படித்து ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்த ஜெபிப்போம். இந்த விடுமுறை நாட்களில், பிள்ளைகள் வேதாகமத்தை வாசிக்க நேரம் செலவிடவும், நாட்களைப் பயனுள்ளதாகப் பயன்படுத்திக்கொள்ளவும் ஜெபிப்போம்.

3. 2026, ஜூன் 21 அன்று நடைபெற இருக்கும் NEET மறுதேர்வுக்காக ஜெபிப்போம். மாணவர்கள் சோர்ந்துபோகாமல், மீண்டும் தேர்வை நல்ல முறையில் எழுதத் தேவையான ஞானத்தை தேவன் தர ஜெபிப்போம்.

4. 2026 மே மாதத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ள GODependence கருத்தரங்கு மற்றும் தொடர் வேதவாசிப்பு நிகழ்வுகள், ஆண்டவருடைய நாமம் மகிமைப்படும்படியாக நடைபெற ஜெபிப்போம்.

5. நமது வேதவாசிப்பு சவால்களில் பரிசுத்த வேதாகமத்தை ஒழுங்காக வாசித்து வரும் சிலர், வரும் நாட்களில் அறுவை சிகிச்சையை எதிர்நோக்கியும், கடந்த நாட்களில் அறுவை சிகிச்சை முடிந்து நல்ல உடல் நலத்திற்காக காத்திருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் பரிபூரண சுகத்தை பெற்றுக் கொண்டு ஆண்டவரை மகிமைப்படுத்த ஜெபிப்போம்.

உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது, உமது அடியேன் அதில் பிரியப்படுகிறேன்.

- சங்கீதம் 119:140

# திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள்



### முழக்கம்: 4. கிறிஸ்து மட்டுமே! (*Solo Christo*)

'Solo Christo! கிறிஸ்து மட்டுமே! இம்முழக்கத்திற்குக் குறைந்தது 7 உட்கூறுகள் உண்டு

#### (1) கிறிஸ்துவே இரட்சிப்பிற்கு ஒரே வழி.

"நானே வழி" என்ற இயேசு, "என் மூலமாக அல்லாது ஒருவனும் பிதாவானவரிடம் வர முடியாது" என்றும் சொன்னார் (யோவான் 14:6). பன்மைத்துவம் (pluralism) என்பதே இன்றைய உலகின் சித்தாந்தம். அதாவது, "நீ நம்புவதும் சரி, நான் நம்புவதும் சரி" எனும் வாதம். இது விவிலியப் போதனை அல்ல. இது கிறிஸ்தவம் அல்ல. முதல் நூற்றாண்டு அப்போஸ்தலரின் முழக்கம் இதோ: அப்போஸ்தலர் 4:12, "இயேசு கிறிஸ்துவினால் அல்லாது வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனிதருக்குள் அவரது பெயரே அல்லாது வேறொரு பெயர் கட்டளையிடப்படவும் இல்லை!" மதச் சகிப்பு எனும் பெயரில் மதச் சமரசத்திற்குள் நாம் சென்றுவிட முடியாது.

கிறிஸ்துவின் இவ்வார்த்தைகளைக் கவனியுங்கள்: யோவான் 10:7&9, "நானே வாசல் ... என் வழியாய் ஒருவன் நுழைந்தால் அவன் இரட்சிக்கப்படுவான்." அவருக்கு முன்னர் வந்த கள்ளத் தீர்க்கரை "கொள்ளைக்காரர்" என்றழைத்தார். அவருக்குப் பின்வரும் "கள்ளக் கிறிஸ்துக்களும்" அப்படியே (மத்தேயு 24:23&25). "தெரிந்துகொள்ளப்பட்டவர்களும்" வஞ்சிக்கப்பட வாய்ப்புண்டு என்பது என்னே எச்சரிப்பு! "பெரிய" அற்புதங்கள் மூலமே கள்ளக் கிறிஸ்துக்கள் மக்களை ஏமாற்றுவர் என்று முன்னறிவித்தார் இயேசு. இன்று அற்புதம் எதுவும் இல்லாமலேயே மக்கள் ஏமாறுகின்றனர்! "அநேக" அந்திக்கிறிஸ்துக்கள் என்ற யோவானின் முன்னறிவிப்பைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்திக்கிறிஸ்துவின் ஆவி ஏற்கனவே இவ்வுலகில் நடமாடிக்கொண்டிருக்கிறது (1 யோவான் 2:18, 4:3).

பழைய ஏற்பாடானது மிகச் சிறந்த வசனங்களைக் கொண்ட மாபெரும் புத்தகம் ஆகும். புதிய ஏற்பாடானது அவைகளின் மீது செய்யப்பட்ட பிரசங்கங்களை உள்ளடக்கி இருக்கிறது.

- சார்லஸ் ஸ்பர்ஜன்

### (2) கிறிஸ்துவே ஒரே நடுவர்.

இச்சத்தியத்தை மிகத் தெளிவாக விளக்கும் பகுதி 1 தீமோத்தேயு 2:5,6, "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனிதருக்கும் நடுவரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதராகிய கிறிஸ்து இயேசு அவரே." 2 கொரிந்தியர் 5:18&21ஐயும் வாசியுங்கள்: "தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்முடன் ஒப்புரவாக்கினார்... கிறிஸ்துவுக்குள் உலகத்தாரைத் தமக்கு ஒப்புரவாக்கினார் ... பாவம் அறியாத கிறிஸ்துவைத் தேவன் நமக்காகப் பாவமாக்கினார்." பெண்களுக்குள் அன்னை மரியாள் பேறுபெற்றவர்கள்தான். ஆனால் அவர்கள் நமக்காய் வேண்டுதல் செய்ய முடியாது. கானாவூர் கலியாண வீட்டில் மட்டும் தான் தேவைக்காய் அன்னை மரியாள் இயேசுவை நாடினார்கள். அவர்களுக்குத் திட்டமாக இயேசு கொடுத்த உடனடிப் பதிலைக் கவனியுங்கள்: "எனக்கும் உங்களுக்கும் என்ன?" (யோவான் 2:4). பரிசுத்தவான்களிடம் வேண்டுவதும் திருவிவிலியத்திற்கு எதிரானது. இயேசு போதித்தது: "என் பெயரால் நீங்கள் எதைக் கேட்டாலும் ... நான் பிதாவை வேண்டுவேன்" (யோவான் 14:14,16). "மரியாளின் பெயரால் நீங்கள் எதைக் கேட்டாலும்" என்றல்ல! சிலுவையில் கிறிஸ்து முடித்துவிட்டதோடு எதையும் கூட்டத் துணியாதிருப்போம்!

### (3) கிறிஸ்துவே நமக்காய்த் தேவனுக்குமுன் ஒரே ஆசாரியர்.

"இயேசுவானவர் என்றென்றும் நிலைத்திருப்பதால் மாறிப்போகாத ஆசாரியத்துவம் உள்ளவராயிருக்கிறார். மேலும், தமது மூலம் தேவனிடம் சேருகிறவர்களுக்காய் வேண்டுதல் செய்யும்படி அவர் எப்பொழுதும் உயிரோடு இருக்கிறவராதலால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபிரெயர் 7:24,25). பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து தமது பிள்ளைகள் "யாவரையும்" "ஆசாரியர்" ஆக்கிவிட்டார் (1 பேதுரு 2:5,9). தேவனைத் துதிக்கும் ஆசாரியர்கள்! தேவனது தூதறிவிக்கும் ஆசாரியர்கள்! கிறிஸ்துவின் மறுவருகைக்கு முன்னரும் பின்னரும் நாம் தேவனுக்குமுன் ஆசாரியர்களாம் (வெளிப்படுத்தல் 1:6,7, 5:10, 20:6).

"அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம்" (Priesthood of all believers) என்பது சீர்திருத்தக் காலங்களில் பிரதானமாய் வலியுறுத்தப்பட்ட சத்தியங்களில் ஒன்று.

துர்ப்பாக்கியமாக இது இன்று ஏட்டில்தான் உண்டு, நடைமுறையில் கிடையாது. இறைமக்களுக்குள் ஆசாரியர், ஆசாரியரல்லாதோர் (clergy & laity) என்று இரு வகுப்பினர் இருப்பதைப் புதிய ஏற்பாடு சகிக்காது. ஆசாரியல்லாதோரே (laity) கிடையாது, இறைமக்கள் யாவரும் ஆசாரியரே (clergy = Gr. klerios)). குருப்பட்டங்களை (clerical titles) நாடியலையாதீர்! (மத்தேயு 23:8&10). பாவ அறிக்கை செய்யவேண்டியது தேவனிடம்தான், எந்தப் பாதிரியிடமும் அல்ல. தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்க முடியும் (மாற்கு 2:7,10, 1 யோவான் 1:7&9). ‘‘அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம்’’ எனும் இம்முக்கிய வேதவுபதேசம் திருச்சபையில் அமுலாக்கப்படும்வரை திருச்சபையானது வேலையில்லாதோரின் சங்கமாகவே (club) தொடரும். உலகமானது நற்செய்தியறிவிக்கப்படாமலேயே திணரும்.

------------ தொடரும்

**(சகோ. R. ஸ்டான்லி அவர்கள் எழுதிய ”நான் நிற்கும் கன்மலை” என்ற நூலில் இருந்து)**

## வாசகர் வாய்ஸ்

இந்த செய்திமடலின் உள்ளடக்கங்களைச் சார்ந்த உங்கள் கருத்துக்கள், பின்னூட்டங்கள், சாட்சிகள் மற்றும் கேள்விகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வாசகர்களை அன்புடன் அழைக்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்படும் பதிவுகள் ஒவ்வொரு மாதமும் GODependence செய்திமடலின் வாசகர் வாய்ஸ் பகுதியில் வெளியிடப்படும்.

உங்கள் வாய்ஸ் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மாதமும் உங்களிடமிருந்து கேட்க ஆவலுடன் எதிர் நோக்குகிறோம். +965 6596 2559

# இயேசு குணமாக்கிய நோயுற்ற பெண்

**இயேசுவிடம் வர எவ்விதத் தகுதியும் தேவையில்லை.**



(மாற்கு 5:21-34)

இயேசு யவீருவினுடைய வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு பெரிய கூட்டம் அவரைப் பின்தொடர்ந்து சென்றது. அங்கே, பன்னிரண்டு ஆண்டுகளாக இரத்தப்போக்கு நோயினால் அவதிப்பட்டு வந்த ஒரு பெண் இருந்தாள். அவள் பல மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றுப் பெரிதும் துன்புற்றாள், தன் கையிலிருந்த பொருளையெல்லாம் செலவழித்தும், அவளுடைய நிலைமை மேன்மேலும் மோசமாகிக்கொண்டே இருந்தது. இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டதும், அவள் அந்தக் கூட்டத்திற்குள்ளே இயேசுவின் பின்னால் வந்து, அவருடைய ஆடையைத் தொட்டாள், ஏனெனில், ”நான் அவருடைய ஆடையை மட்டும் தொட்டால் போதும், நான் குணமடைந்துவிடுவேன்” என்று அவள் தன் உள்ளத்தில் நினைத்திருந்தாள். உடனே, அவளுடைய இரத்தப்போக்கு நின்றுபோனது.

அக்கணமே, தன்னிடம் இருந்த வல்லமை வெளியேறியிருப்பதை இயேசு உணர்ந்தார். அவர் திரும்பிப் பார்த்து, ”என் ஆடையைத் தொட்டது யார்?” என்று கேட்டார். மக்கள் அவரை நெருக்கி நெருக்குவதைக் கண்ட அவருடைய சீடர்கள், ”இப்படி நீங்கள் கேட்பது ஏன்?” என்று பதிலளித்தனர். ஆனால் இயேசுவோ, அதைச் செய்தது யார் என்று அறிந்துகொள்ளும் நோக்கத்தில் சுற்றிலும் உற்று நோக்கிக்கொண்டிருந்தார்.

அப்போது, அந்தப் பெண் நடுங்கிக்கொண்டே இயேசுவின் பாதங்களில் விழுந்து, நடந்த உண்மையை முழுமையாக அவரிடம் எடுத்துரைத்தாள். இயேசு அவளை நோக்கி, ”மகளே, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது. நீ சமாதானத்தோடு போ, உன் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவாயாக” என்று கூறினார்.

### இந்த நிகழ்வில் உள்ள சிறப்பு என்ன?

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, இரத்தப்போக்கு உள்ள ஒரு பெண் யாரையும் தொடக்கூடாது (லேவியராகமம் 15:25-27). ஆனால் இந்தப் பெண், இயேசுவின் நற்குணத்தின் மீதும் கருணையின் மீதும் நம்பிக்கை வைத்திருந்தாள். இயேசுவே தேவன் என்பதை அவள் அறிந்திருந்தாள். அக்காலத்தில் நிலவிவந்த சமூகக் கட்டுப்பாடுகளையும் விலக்குகளையும் மீறி, இயேசுவின் ஆடையைத் தொடுவதற்குத் துணிவு பெற்றவளாய் அவள் செயல்பட்டது, அவளுடைய அத்தகைய உறுதியான விசுவாசத்தினாலேயே ஆகும்.

**இயேசுவிடம் வருவதற்குத் தனக்குத் தகுதி இல்லை என்று நீங்கள் உணர்ந்தால், கலங்காதீர்கள். எவரும் விசுவாசத்தோடும், மனம் வருந்திய இருதயத்தோடும் அவரிடம் வரலாம்; அவர் அவர்களுக்கு இளைப்பாறுதலை அளிப்பார் (மத்தேயு 11:28).**

**– சகோ. பீட்டர் ஏ.ஆர்., பாலக்காடு, கேரளா.**

நாம் வேதாகமத்தை மிகவும் அதிகமதிகமாக படிக்க வேண்டும். அதை நம் இருதயத்திற்குள் வைத்துக்கொள்வதுடன் அல்லாது, நம் ஆத்துமா முழுவதிலும் ஊடுருவிச் செல்ல அனுமதிக்க வேண்டும். - ஹொரேசியோ போனர்

# வேதவாசிப்பு சவால்கள்

## 01 ஜூன் 2026 முதல்

**”வேதாகமத்துடனான உங்கள் உறவு வேதாகமம் வாசிப்பதுடன் முடிந்து விடுவதில்லை. மாறாக, வேதாகமம் வாசிப்பது தான் அதற்கான துவக்கமாக இருக்கிறது.”**

பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பது ஒருபோதும் அதை வாசிப்பவரைக் களைப்படையச் செய்வதில்லை, மாறாக வாசிப்பவரின் மனதைப் புதுப்பித்து புத்துணர்வூட்டுகிறது. வேதத்தை வாசிப்பதின் பலன்களை இதுவரை நீங்கள் பெறாதிருந்தால், 01 ஜூன் 2026 முதல் துவங்கும் ”வேத வாசிப்புச் சவால்களில்” ஒன்றில் சேர்ந்து வேதம் வாசித்து மகிழ நாங்கள் (GODependence) உங்களை அன்புடன் அழைக்கிறோம்.




தேவனுடைய ஜனங்கள் தேவ வார்த்தையைக் கவனித்து, தேவ மகிமையைப் பார்க்கும்போது, தேவ குமாரனைப் போல அவர்கள் மாறும்படி தேவ ஆவியானவர் அவர்களை உருமாற்றுகிறார். - வாரன் வியர்ஸ்பி

**பின்வருவன நமது வேத வாசிப்புச் சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள்:**

👨‍💼♂ "அக்டோபர் 2020 முதல், தேவனுடைய கிருபையால், இந்த சவால்களின் மூலம் நான் முழு வேதாகமத்தையும் 55வது முறையாக வாசித்து முடித்துள்ளேன். எல்லா மகிமையும் தேவனுக்கே." – Shunmugiah M

👩 "நான் 14 தடவை பரிசுத்த வேதாகமத்தை வாசித்து வசனங்களை உள்வாங்கியிருக்கிறேன். திரும்பத் திரும்ப வாசிப்பதால் வசனங்கள் மறவாமல் இருக்கிறது. எனது வயது எழுபது... கண் மட்டும் கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது. ஆனாலும் எப்படியாவது வாசித்து முடித்து விடுவேன். உங்கள் குழுவினர் அனைவருக்கும் நன்றி." - Ranjitham Devakumari.

👩 "வேதத்தை ஒழுங்கும் கிரமுமாக வாசிக்க இந்த வேதவாசிப்பு சவால் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. வேதத்தை அதிகமாக படிக்க ஆர்வத்தை தூண்டியது."
- P. Christy Premalatha

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

✴ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✴ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✴ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✴ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

# வேதவாசிப்பு சவால்கள்

**01 ஜூன் 2026 முதல்**

✷ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✷ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✷ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✷ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

" எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு கால அளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

- GODependence குழு

CLICK HERE » wa.me/96565962559

**** ☝ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே! "

தேவனிடம் செல்வதற்கான வழி தேவனுடைய வார்த்தையே. நீங்கள் தேவனுடைய வார்த்தையை விட்டுவிடுவீர்கள் எனில், தேவனை இழந்து விடுவீர்கள். இயேசுவே தேவனுடைய வார்த்தையானவர். - இஸ்ரவேல்மூர் அயிவொ

GODDependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

| 1 மாத வேதவாசிப்புச் சவால் | 2 மாத வேதவாசிப்புச் சவால் | 3 மாத வேதவாசிப்புச் சவால் |
|---|---|---|
| தினமும் 45 அதிகாரங்கள் | தினமும் 22 அதிகாரங்கள் | தினமும் 15 அதிகாரங்கள் |
| வாசிப்பு நேரம்: 2 மணி 30 நிமிடங்கள் | வாசிப்பு நேரம்: 1 மணி 30 நிமிடங்கள் | வாசிப்பு நேரம்: 60 நிமிடங்கள் |

**உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி**

| 4 மாத வேதவாசிப்புச் சவால் | 6 மாத வேதவாசிப்புச் சவால் | 1 வருட வேதவாசிப்புச் சவால் |
|---|---|---|
| தினமும் 11 அதிகாரங்கள் | தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள் | தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள் |
| வாசிப்பு நேரம்: 45 நிமிடங்கள் | வாசிப்பு நேரம்: 25 நிமிடங்கள் | வாசிப்பு நேரம்: 15 நிமிடங்கள் |

இன்னும் தாமதம் ஏன்?
இன்றே சேருங்கள்.

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

சிலர் எபிரெய மொழியில் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கின்றனர்; சிலர் கிரேக்க மொழியில் வாசிக்கின்றனர். நானோ என் வேதாகமத்தை பரிசுத்த ஆவியில் வாசிக்க விரும்புகிறேன்.
- ஸ்மித் விகிள்ஸ்வொர்த்

# GODependence வேதவாசிப்பு சவால்கள்

GODependence
True freedom is being dependent on God

## Bible Reading Challenges

### GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc

சிறந்தது என்று நாம் நினைப்பதைச் செய்வதற்கான அனுமதிபெற நாம் வேதாகமத்திற்குச் செல்வதில்லை, மாறாக, சிறந்தது என்று அவர் சொல்வதைச் செய்வதற்கான வழிகாட்டுதலைப் பெற நாம் வேதாகமத்தை நோக்கிச் செல்கிறோம். - டேவிட் பிளாட்

# வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 19

## வேதப்பகுதி: யாக்கோபு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1→ | | | ■ | 2→ | | |
| 3→ | | | | | | |
| | 4↓ | | 5↓ | 6↓ | 7↓ | |
| | | 8↑ | | | | |
| | | | 9← | | | |
| | | 10→ | | | 11↑ | ←12↑ |
| 13↑→ | | | ■ | | | ←14 |

### ➡ இடமிருந்து வலம்

1. விசுவாசத்தின் பரீட்சை உண்டாக்குவது --- (3)
2. புகையைப் போலிருப்பது --- (3)
3. --- வாசற்படியில் நிற்கிறார் (6)
10. மனுஷருடைய --- தேவனுடைய நீதியை நடப்பிக்காது (3)
13. அவயவங்களில் போர்ச்செய்கிறது-- (3)

### ⬅ வலமிருந்து இடம்

9. கிரியைகளினால் நீதியுள்ளவளாக்கப்பட்டவள் (3)
12. இச்சை பிறப்பிப்பது --- (3)
14. விசுவாசமுள்ள --- பிணியாளியை இரட்சிக்கும் (3)

### ⬇ மேலிருந்து கீழ்

4. நாவும் --- தான் (4)
5. --- ஆயுள்சக்கரத்தை கொளுத்திவிடுகிறது (2)
6. பாவம் பூரணமாகும்போது பிறப்பது --- (4)
7. உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான --- (2)

### ⬆ கீழிருந்து மேல்

8. நம்மைப்போல் பாடுள்ள மனுஷனாயிருந்தவன் (3)
11. கர்த்தரின் -- சமீபமாயிருக்கிறது (3)
12. சோதனையை சகிக்கிற மனுஷன் --- (6)
13. நியாயத்தீர்ப்புக்கு முன்பாக --- மேன்மை பாராட்டும் (5)

**குறிப்பு** : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE https://forms.gle/Uvc6zkCpXZ3ZnaKD6

கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/05/2026க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

இருண்ட கண்டத்தில் வெள்ளை ராணி

# மேரி ஸ்லெஸர் (1848-1915)

மழை பெய்து கொண்டு இருந்தது. விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. தெருவின் வழியாக பதினாறு வயது நிரம்பிய ஒரு பெண் போய்க்கொண்டிருந்தாள். முரட்டுக் குணம் உடைய இளைஞர் கூட்டம் ஒன்று அவளைப் பின்தொடர்ந்தது. அவர்கள் அவளைச் சூழ்ந்து கொள்ளும்வரை அவள் அதனைக் கவனிக்கவில்லை. அந்தக் கூட்டத்தின் தலைவன் ஒரு நீண்ட கயிற்றில் சில ஈயத்துண்டுகள், தகடுகளைக் கட்டி அதைத் தலைக்கு மேலாகச் சுழற்றியபடி அவள் அருகில் சென்றது மட்டுமல்லாமல், ”நீ உன்னுடைய ஞாயிறு பள்ளியினை நிறுத்திவிட்டு எங்களைச் சும்மா விடும்வரைக்கும் உனக்கு ஒரு பாடம் கற்பிக்கப் போகிறோம்” என்று கூறினான்.

உறுதியான தீர்மானத்தோடு மேரி தனது நிலையிலே நின்றுகொண்டு ”நீ விரும்புவதைச் செய்யலாம்” என்றாள். அவள் அருகே மிகவும் நெருங்கி, அந்த ஈயத்துண்டுகளை மிகவும் வேகமாகச் சுழற்றினான். ஆனால் மேரி தைரியமாக அவ்விடத்திலேயே நகராமல் நின்றாள். கடவுளின் வேலையைச் செய்வதால் அவர் தன்னைக் காத்துக் கொள்வார் என்ற தைரியம் அவளுக்கு இருந்தது. அந்தப்பக்கத்தில் உள்ள சேரியிலே உள்ள சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் அவள் வேதபாட வகுப்புகள் நடத்திக் கொண்டிருந்தாள். அங்குள்ள முரட்டுத்தனமான பையன்களுக்கு அது பிடிக்கவில்லை. ஆகவே, இந்த வகுப்புகளைச் சீர்குலைக்க வேண்டும் என்று தீர்மானித்தே இவ்வாறு இடையூறு செய்தனர்.

ஆனால் மேரி தைரியமாக அசையாமல் நின்றதைக் கண்டபோது, அவர்களுக்கு அவள்மீது இருந்த வெறுப்பு நீங்கி அவளது தைரியத்தினாலே அவர்கள் கவரப்பட்டார்கள். ஆகவே, அந்தக் குழு முழுவதும் அன்று முதல் ஞாயிறு வகுப்பிற்குச் செல்ல ஆரம்பித்தது. அதன் விளைவாக அந்தக் கூட்டத்தின் தலைவன் தன்னுடைய வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைக்கண்டான்.

**சிறுமியான மேரி:** மேற்கூறிய நிகழ்ச்சியில் சொல்லப்பட்டிருக்கும் சிறுமியான மேரி ஸ்லெஸர் 1848ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் நாள் ஸ்காட்லாந்து தேசத்தில் பிறந்தாள். அவளுடைய பெற்றோர் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்தபடியினாலே பதினோரு வயது நிரம்பியவளாகும்போதே தன்னுடைய குடும்பத்தைத் தாங்குவதற்காக அருகில் இருந்த தொழிற்சாலையில் பணிபுரிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் அவள் தொழிற்சாலையில் வேலை செய்துவிட்டு, அதன்பிறகு ஒர் இரவு பாடசாலைக்குச் சென்று படித்து வந்தாள். ஒரு புத்தகத்தைத் தன்னோடு எடுத்துச் செல்வாள். வேலை செய்யும் போதும் சிலசமயம் தன் பாடங்களைப் படிப்பாள். இவ்விதமாகவே தன்னுடைய வேதாகமத்தையும் எடுத்துச் சென்று படிப்பாள். அந்த நாட்களில் கர்த்தருடைய பிரசன்னம் மிக அருகில் இருந்ததை அவள் உணர்ந்தாள். அதுமட்டும் அல்ல, அவ்வப்போது ஆண்டவர் அவளோடு பேசுவதையும் அவள் தெளிவாக உணர்ந்தாள். வயதான ஒர் அம்மாள் கூறிய செய்தியின் மூலமாக ஆண்டவரைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டாள். மேலும் ஆண்டவரை அதிகமாக நேசித்தாள். யோவான் எழுதிய நற்செய்தி நூலை மிகவும் பிரியமாக வாசிப்பது உண்டு. பல சமயங்களில் தனது தூக்கத்தை மறந்து அவள் புத்தகங்களை வாசித்துக் கொண்டிருப்பாள்.

பரிசுத்த வேதாகமமானது நம் வீடுகளில் பயன்படுத்தப்படாமல் இருக்குமெனில் அதினால் ஒரு பயனுமில்லை. அதில் என்ன இருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிந்து, அதில் உள்ள வசனங்களை நம் மனதிலும் நினைவிலும் பொக்கிஷமாக சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். – ஜே.சி.ரைல்

அவருடைய தந்தை ஒரு குடிகாரனாக இருந்த படியினால் குடும்ப வாழ்க்கை என்பது சுமூகமாக இல்லை. குடிவெறியிலே வீட்டிற்கு வரும் தகப்பன் அடிக்கடி தனது தாயாரை அடித்துத் துன்புறுத்துவதைக் கண்டாள். அந்த வேளைகளில் மேரி கண்ணீரோடும், துயரத்தோடும் பயத்திலே ஆதரவு அற்ற நிலையிலே வீட்டை விட்டு வெளியே துரத்தப்பட்டு இருளிலே அலைய நேர்ந்தது. என்றாலும் இவ்விதமான எல்லா அனுபவங்களும், அவளுடைய எதிர்கால வாழ்க்கையின் அனுபவங்களுக்கும், வாழ்க்கையின் வேலைகளுக்கும் முன்னோடியாக அவளைப் பயிற்றுவித்தன.

மேரியின் தாயார் மிகவும் பக்தி நிறைந்த ஒரு கிறிஸ்தவப் பெண். அடிக்கடி இந்த அம்மையார் தன்னுடைய பிள்ளைகளை அழைத்து இயேசு கிறிஸ்துவின் அன்பையும், ஆப்பிரிக்காவில் உள்ள பிள்ளைகளுக்குக் கிறிஸ்துவின் அன்பைப் பற்றித் தெரியாது என்பதையும் எடுத்துச் சொல்வார்கள். தன்னுடைய தாயிடம் இருந்துதான் மிஷனெரி பணிக்கான ஒர் ஆழ்ந்த பாரத்தை மேரி பெற்றுக்கொண்டாள். அவள் தன் தாயாரைப் பார்த்து "அம்மா நான் ஆப்பிரிக்கச் சிறுவர்களுக்கு நற்செய்தி அறிவிக்க ஒரு மிஷனெரியாகச் செல்வேன்" என்று அடிக்கடி சொல்வது உண்டு.

இந்தப் பிள்ளைகள் தங்கள் விளையாட்டு வேளையில் கூட பிரசங்கம் செய்து விளையாடுவது உண்டு. தனது மனதில் ஆப்பிரிக்கப் பிள்ளைகளாகப் பலரை நினைத்துக் கொண்டு அவர்களுக்குச் சுவிசேஷத்தை மேரி சொல்வது உண்டு. இந்த பிள்ளைகள் ஆப்பிரிக்காவைப் பற்றித் தெளிவான விபரங்களை அறிந்திருந்தபடியினால், அவர்களுடைய மூத்த சகோதரனான இராபட் மிஷனெரியாக ஆப்பிரிக்கா செல்வார் என்று தாயாரும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அவ்விதமாக நடைபெறவில்லை. மேரி 14 வயதாக இருக்கும்போது அவளுடைய தகப்பனால் ராபர்ட் உட்பட அவளது இரண்டு சகோதரர்களும் எதிர்பாராத விதத்தில் மரணம் அடைந்தார்கள். குடும்பத்தை முழுவதுமாகப் பராமரிக்கும் பாரம் மேரியின்மேல் விழுந்தது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காகத் தன்னையே தியாகம் செய்யும் வாழ்க்கையினை அவள் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இக்கடுமையான துன்பங்களின் மூலமாக மேரி முன்னிலும் அதிகமான தைரியமும், பொறுமையும் உடையவளானாள்.

**ஆப்பிரிக்காவிற்கு அழைப்பு:** தான் ஒரு மிஷனெரியாவதற்கு முன்னதாகவே மேரி முழுமனதோடு ஆண்டவருக்காகத் தன் சொந்தப் பட்டணத்தில் சாட்சியாய் விளங்கினாள். நாம் ஆண்டவருக்குப் பணிபுரிய தூர இடங்களுக்குச் செல்லுமுன், நம்முடைய சொந்த ஊரிலும் இனத்தாரிடத்திலும் ஆண்டவருக்கு சாட்சியாக இருக்க வேண்டும். மேரி ஒரு நாளைக்குப் பத்துமணி நேரம் தொழிற்சாலையில் வேலை செய்வாள். என்றாலும், தன்னுடைய ஒய்வு நேரத்திலெல்லாம் கடவுளுக்கு எவ்வளவு சிறப்பாக பணிபுரிய முடியுமோ அவ்வளவு சிறப்பாகப் பணிபுரிவாள். இவ்விதமாக 14 ஆண்டுகள் கடந்தன. ஆனால் அந்த ஆண்டுகளில், ஆப்பிரிக்காவின் காடுகள், அவற்றில் உள்ள குடிசைகள் எல்லாம் எப்போதுமே அவள் மனக்கண்முன் காட்சி அளித்துக் கொண்டே இருந்தன.

ஆப்பிரிக்காவில் மிஷனெரியாகப் பணியாற்றிய டேவிட் லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்காவிலேயே இறந்துவிட்டார் என்ற துயரச் செய்தி ஸ்காட்லாந்து தேசத்தில் பரவியது. அந்த இடத்திற்கு இனி யார் சென்று அந்தப் பணியைத் தொடர்வார்கள் என்ற கேள்வியும் எழுந்தது. இந்த அறைகூவல் ஆப்பிரிக்காவிற்குச் செல்வதற்கான மேரியின் அழைப்பினை உறுதி செய்தது. ஆப்பிரிக்கா செல்வதற்கு இப்படி ஒர் அழைப்பு இருப்பதை மேரி தன் தாயாரிடம் கூறினாள். அவளுடைய தாயார் மகிழ்ச்சியாக சம்மதித்தார். உடனே மேரி மிஷனெரி சங்கத்திற்கு ஒர்

கடிதம் எழுதினாள். அவளது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாயும், அவள் ஆப்பிரிக்காவிலே கலாபார் என்ற இடத்திற்கு மிஷனெரியாக நியமிக்கப்பட்டு இருப்பதாகவும் மிஷனெரி சங்கத்திலிருந்து பதில் வந்தது.


1876ஆம் ஆண்டு மேரி ஸ்லெஸர் கப்பலின் மேல் தளத்தில் நின்று நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கையசைத்து விடைபெற்று மிஷனெரியாக ஆப்பிரிக்கா புறப்பட்டாள். அந்தக் கப்பலில் விஸ்கி, மதுபானம் அடங்கிய பெட்டிகள் அதிகமாக வைக்கப்பட்டிருந்தன. அதைக் கண்ட மேரி, "ஐயோ! ஆப்பிரிக்காவிற்குப் பெட்டி பெட்டியாக மதுபானப் பொருட்கள் செல்லுகின்றன. ஆனால் அங்கு செல்ல ஒரே ஒரு மிஷனெரிதானா?" என்று ஆச்சரியத்தோடு கூறினாள். கடல் பிரயாணத்தின்போது அவளோடு பிரயாணம் செய்த ஒருவர் ஆப்பிரிக்காவைப் பற்றி அதிகமான குறிப்புகளை அவளுக்குக் கொடுத்தார். எவ்விதமாக ஆப்பிரிக்கா அடர்த்தியான காடுகளினால் மூடப்பட்டு இருக்கிறது, எந்த ஒரு வெள்ளையனுமே பார்த்திராத வேகமான ஆறுகள் ஓடுகின்றன. காட்டாறுகள் வேகமாக எழும்பிக் குடிசைகளையும், மரங்களையும் வேரோடு அடித்துக் கொண்டு செல்கின்றன என்பதையும் விளக்கினார். அதுமட்டுமின்றி அடர்த்தியான காடுகளில் பெரும் யானைகள், சிறுத்தைகள், புலிகள், பயங்கரமான பாம்புகள் எல்லாம் இருக்கின்றன என்றும் நதிகளில் நீர்யானைகள், முதலைகள் ஏராளமாய் இருக்கின்றன என்றும் விவரித்தார்.

**ஆப்பிரிக்காவில் மேரி:** ஆப்பிரிக்காவில் டியூக் டவுன் என்ற கடற்கரைப் பட்டணத்தை மேரி அடைந்து அங்கு நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தாள். அந்த நாட்டு மொழியினைக் கற்றுக் கொள்வதற்கும் அந்த மக்களைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கும் அது அவளுக்குப் பெரும் உதவியாக இருந்தது. அந்த நாட்டில் உள்ள ஆப்பிரிக்கச் சிறுவர் சிறுமியருடன் நன்முறையில் பழக ஆரம்பித்தாள். அவர்களோடு மிகவும் நட்புடன் பழகியதால் அவர்களுடைய நல்லெண்ணத்தையும், நல்மதிப்பையும் பெற்றுக்கொண்டாள். ஆனால் அவளுடைய உள்ளத்திலோ ஆப்பிரிக்காவின் காடுகள் நிறைந்த உள்பகுதிகளுக்குச் செல்லவேண்டும், அங்கே ஆண்டவரை அறியாத மக்களுக்கு ஆண்டவரைப்பற்றிச் சொல்லவேண்டும் என்ற விருப்பம் மேலிட்டு இருந்தது.

**இருண்ட கண்டம்:** ஆப்பிரிக்கா எதனால் "இருண்ட கண்டம்" என்று அழைக்கப்படுகிறது என்பதை வெகுவிரைவில் புரிந்து கொண்டாள் மேரி. அங்கே பாவம், கொடுமை, அசுத்தம் முதலிய தீமைகள் நிறைந்த ஒரு நிலைமை காணப்பட்டது. அடிமை வியாபாரம் தாராளமாக நடந்து கொண்டிருந்தது. ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் ஈவிரக்கம் இன்றி பிடிக்கப்பட்டு அடிமைகளாக விற்கப்பட்டு மிருகங்களை காட்டிலும் மோசமாக நடத்தப்பட்டார்கள். அங்கிருந்த மக்கள் குளங்களிலும், மரங்களிலும் பலவித அசுத்த ஆவிகள் இருக்கிறதாக நினைத்துப் பயந்திருந்தார்கள். வேறு சிறுமலை வாசிகள் சண்டையிடுவதிலும், குடித்து வெறித்துக் கூத்தாடுவதிலும் தங்கள் வாழ்க்கையையும், காலத்தையும் விரயமாக்கிக் கொண்டிருந்தார்கள். இன்னும் அதில் பலர் மனிதரைத் தின்னும் நரமாமிச பட்சினிகளாய் இருந்தார்கள். தங்களுடைய தெய்வங்களைப் பிரியப்படுத்துவதற்காக மிருகங்களின் இரத்தத்தைச் சிந்துகிறவர்களாகவும் இருந்தார்கள். **--தொடரும்--**

**[தியோடர் வில்லியம்ஸ் எழுதிய “சிலுவையின் ஊழியர்கள்” (IEM Outreach பப்ளிகேஷன்ஸ்) என்னும் புத்தகத்திலிருந்து]**

பரிசுத்த வேதாகமத்தின் நோக்கம் மனிதர்கள் எவ்வளவு நல்லவர்கள் என்பதைப் பற்றிச் சொல்வது அல்ல; மாறாக, கெட்ட மனிதர்கள் எப்படி நல்லவர்களாக முடியும் என்பதாகும். - டி.எல்.மூடி



## உங்களுக்குத் தெரியுமா?

# பூமியில் உயிரினங்கள் வாழ்வதன் ரகசியம் என்ன?

### (பகுதி 1 – சந்திரன்)

பூமியின் அச்சுச் சாய்வை சுமார் 23.5° அளவில் நிலையாக வைத்திருக்க சந்திரன் உதவுகிறது. சந்திரன் இல்லாவிட்டால், இந்தச் சாய்வு பெருமளவில் மாறுபட்டு, மிகக் கடுமையான மற்றும் கணிக்க முடியாத பருவ கால மாற்றங்களுக்கு வழிவகுக்கும். மேலும், சந்திரன் பூமியின் சுழற்சி வேகத்தையும் குறைக்கிறது. அது இல்லாவிட்டால், பூமி மிக வேகமாகச் சுழன்று, பகல் பொழுதை மிகவும் சுருக்கிவிடும்; ஒருவேளை 6 முதல் 8 மணி நேரம் மட்டுமே இருக்கலாம். இது தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்களின் வாழ்வை சாத்தியமற்றதாக்கிவிடும்.

பூமியில் உயிரினங்கள் செழித்து வாழ்வதற்கு ஏற்றவாறு, சந்திரன் இவ்வளவு துல்லியமான இடத்தில் அமையவும், அது தோன்றவும் காரணம் என்ன? **எவ்விதப் பாரபட்சமும் இல்லாத எவரும், இது வெறும் தற்செயலாக நிகழ்ந்திருக்க முடியாது என்றே கூறுவர். அப்படியானால், இதற்கான விடை என்ன?**

வேதாகமம் இவ்வாறு கூறுகிறது: **"சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார்…"** (சங்கீதம் 104:19). மேலும் அது இவ்வாறு பிரகடனப்படுத்துகிறது: **"வானங்களைச் சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச்செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர்…"** (ஏசாயா 45:18). பூமியில் உயிரினங்கள் நிலைத்திருப்பதற்குத் தேவையான அனைத்துக் காரணிகளையும் தேவன் மிக நேர்த்தியாக அமைத்துள்ளார்.

பூமியில் உயிரினங்கள் எவ்வாறு நிலைத்திருக்கின்றன என்பதை அறிவியல் தொடர்ந்து ஆராய்ந்து வரும் வேளையில், வேதாகமமோ ஒரு தெளிவான மற்றும் நோக்கமுள்ள சிருஷ்டிகரைச் சுட்டிக்காட்டுகிறது.

**இந்த ரகசியங்களை நீங்கள் மேலும் ஆழமாக அறிந்துகொள்ள விரும்பினால், வாழ்க்கையின் ரகசியங்களைப் பற்றி அதிகம் கண்டறிய உதவும் பரிசுத்த வேதாகமத்தை வாசியுங்கள்.**



### உங்களுக்கு தெரியுமா?

**"மிகக் குறுகிய காலம்"**

நியாயாதிபதிகளில் மிகக் குறுகிய காலமே குறிப்பிடப்பட்டவர் சம்கார். ஒரே ஒரு வசனத்தில், அவர் ஒரு தாற்றுக்கோலை (கால்நடைகளை ஓட்டும் ஒரு நீண்ட மரக்கருவி) மட்டுமே பயன்படுத்தி 600 பெலிஸ்தியர்களைக் கொன்று, இஸ்ரவேலை மீட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது (நியாயாதிபதிகள் 3:31).

### உங்களுக்குத் தெரியுமா?

**"முட்செடி ராஜா"**

கிதியோனின் குமாரனான அபிமெலேக்கு, தேவனால் நியமிக்கப்பட்ட நியாயாதிபதி அல்ல, மாறாகத் தன்னைத்தானே ராஜாவாக அறிவித்துக் கொண்டவர். அவர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக தனது 70 சகோதரர்களை ஒரே கல்லின் மேல் கொன்றார், இறுதியில் ஒரு கோபுரத்திலிருந்து ஒரு பெண் அவர் தலையில் ஒரு ஏந்திரக்கல்லை போட்டதினால் அவர் மரித்தார் (நியாயாதிபதிகள் 9:1-5, 53).



சிறுபிள்ளையைப் போல விசுவாசம் உள்ளவர்களாக இருப்பதை வேதாகமத்தைப் பற்றிய சிறுபிள்ளைத்தனமான சிந்தனையுடன் ஒருபோதும் குழப்பிக் கொள்ளாதீர்கள். - மெக்ஆர்தர்

# GODependence சமூக ஊடக தளங்கள்

## GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1.3K சந்தாதாரர்களையும் 292 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







## GODependence WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R




## GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

தேவனுடைய வார்த்தைக்கு வரும் வழி இதுதான்.தேவன் உங்களுக்கு எழுதிய அன்பின் கடிதம் என்று கருதி பரிசுத்த வேதாகமத்தை நீங்கள் வாசிக்க வேண்டும். - ஹோவர்ட் ஜி. ஹெண்ட்ரிக்ஸ்

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

30 April 2026 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்























... கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, ... - 1 கொரிந்தியர் 15:3-4

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 19

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**வேதப்பகுதி: யாக்கோபு**

1


2


3


4


5


6


7


8


9


10


https://forms.gle/4C9S1UnBd6U9peB88

- மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/05/2026 க்கு முன்பதாக அனுப்பவும்.
- சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 18 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 18 எபிரேயர் - இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள்

**வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 18**

1. எஸ். பாலிங் கிளாஸ்டோன் துரை
2. காயத்ரி இவாஞ்சலின்
3. ஆர் ஜோசபின்
4. ஜான்ஸ்.ஜே
5. கிறிஸ்டி ஜோசப்
6. கிருபா ஜான்சன்
7. என்.மேரி-ஆக்னஸ்
8. அமுதா ஜெகன்
9. டி. ரேணுகா

**விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 18**

- கிறிஸ்டி ஜோசப்
- அமுதா ஜெகன்

தேவனுடைய வார்த்தையை வாசித்து, ஜெபம் செய்து தேவனுடன் நேரம் செலவிடவேண்டும் என்று நீங்கள் தீர்மானிக்கும்போது, பொறுமையும் அதைச் செய்வதற்கான சக்தியும் மிகவும் முக்கியமானது ஆகும். - பாலின் கிரீடன்

# பதில்கள்

**கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 18 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 18 எபிரெயர்-இல் கேட்கப்பட்ட வினாக்களுக்கான சரியான பதில்கள்**

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 18

➡ இடமிருந்து வலம்
1. வாக்குத்தத்தம் (4:1)
3. முடிவு (6:16)
6. ஆபேல் (11:4)
9. கேருபீன்கள் (9:5)
11. இயேசு (12:24)
13. அதிகாரி (2:14)

⬇ மேலிருந்து கீழ்
2. தகப்பன் (12:7)
4. மோசே (3:2)
5. பிணையாளி (7:22)

⬅ வலமிருந்து இடம்
7. தேவன் (12:29)
10. சுதந்தரவாளி (1:2)
12. மன்னிப்பு (9:22)
14. ஏனோக்கு (11:5)

⬆ கீழிருந்து மேல்
8. நோவா (11:7)
12. மரணசாசனம் (9:17)

## விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 18

1) எபிரெயர்: 1:14
2) எபிரெயர்: 2:16
3) எபிரெயர்: 4:12
4) எபிரெயர்: 5:12
5) எபிரெயர்: 6:10
6) எபிரெயர்: 7:25
7) எபிரெயர்: 9:27
8) எபிரெயர்: 11:1
9) எபிரெயர்: 12:1
10) எபிரெயர்: 13:2


## ஆசிரியர் குழு

- பேதுரு தேவதாசன்
- அற்புதராஜ் சாமுவேல்
- ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
- ஏ. ஆர். பீட்டர்
- டெ. டென்சிங்
- டார்வின் நேசகுமார் அ
- ஷோபா தானியேல்
- ஜோசஃபீன் ஷைனி பால்
- கேதரின் சுஜி


நாம் ஆவிக்குரிய எழுப்புதல்களைக் காண விரும்பினால், தேவனுடைய வார்த்தை மீதான நம் பயபக்தியை நாம் உயிரோட்டமுள்ளதாக மாற்ற வேண்டும். - சார்லஸ் ஸ்பர்ஜன்

# யாக்கோபு

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 67- கி.பி. 69
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 49
**நூலின் ஆசிரியர்:** யாக்கோபு
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- இக்கடிதம் உலகெங்கும் சிதறுண்டு வாழும் இஸ்ரவேலின் பன்னிரு குலத்தினருக்கும் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் யூதக் கிறிஸ்தவர்களாயினும் இக்கடிதம் தரும் போதனை யூதக் கிறிஸ்தவர்களுக்கும் பிற இனத்துக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தவே அமைந்துள்ளது. இக்கடிதம் கிறிஸ்தவ நடைமுறை வாழ்வுக்கான அறிவுரை எனினும், பழைய ஏற்பாட்டின் ஞான நூல்களின் தன்மையைக் கொண்டுள்ளது.

## சூழலும் நோக்கமும்

- கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தின் மூலம் ஒருவர் அனைத்து பழைய ஏற்பாட்டு சட்டங்கள், அனைத்து சட்டங்கள், அனைத்து மதச்சார்பற்ற சட்டம் மற்றும் ஒரு சமூகத்தின் அனைத்து அறநெறிகளிலிருந்தும் முற்றிலும் விடுபடுகிறார் என்ற ஆன்டினோமியனிசம் எனப்படும் தீவிரக் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் இந்த கடிதம் எழுதப்பட்டது என்று சிலர் நினைக்கிறார்கள்.
- யாக்கோபு புத்தகம் அனைத்து நாடுகளிலும் சிதறி இருக்கும் யூத கிறிஸ்தவர்களுக்கு அனுப்பப்பட்டது (யாக் 1:1). இந்த கடிதத்தை வெறுத்து அதை "வைக்கோல் கடிதம்" என்று அழைத்த மார்ட்டின் லூதர், செயல்கள் பற்றிய யாக்கோபின் போதனைகள் விசுவாசத்தைப் பற்றிய பவுலின் போதனைக்கு முரணானதாக இல்லை என்பதை அங்கீகரிக்கத் தவறிவிட்டார்.
- பவுலின் போதனைகள் நாம் தேவனுடைய நீதியாகுதலில் கவனம் செலுத்துகையில், யாக்கோபின் போதனைகளோ அந்த நியாயத்தை எடுத்துக்காட்டும் கிரியைகளில் கவனம் செலுத்துகின்றன. இந்த புதிய கிறிஸ்தவ விசுவாசத்தில் தொடர்ந்து வளர யூதர்களை ஊக்குவிக்க யாக்கோபு அவர்களுக்கு கடிதம் எழுதினார்.
- கலாத்தியர் 5:22-23 ல் பவுல் விவரிக்கிறபடி, ஆவியின் கனி ஆவியால் நிரப்பப்பட்டவர்களிடமிருந்து இயற்கையாகவே நல்ல செயல்களாய் வரும் என்று யாக்கோபு வலியுறுத்துகிறார்.

## முக்கிய வசனங்கள்

யாக் 1:2-3, யாக் 1:19, யாக்2:17-18, யாக் 3:5, யாக் 5:16

## புத்தகத்தின் சுருக்கம்

- இக்கடிதத்தின் முக்கியக் கருத்து கிறிஸ்தவர் ஒருவர் தம் அன்றாடக் கடமைகளைப் பிழையின்றிச் செய்து முடிக்க வேண்டும் என்பதாகும்.
- உண்மையான கிறிஸ்தவ வாழ்வு தன்னல மறுப்பையும் பரிசுத்த வாழ்வையும் உள்ளடக்கியது.(1: 1-27). நம்பிக்கை, பிறரன்பு போன்றவை செயல்களில் காட்டப்பட வேண்டும். செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம் (2: 1-26), நாவை அடக்குதல், அமைதி வாழ்விற்கான ஆர்வம் ஆகியவை ஒருவரை ஞானியாகவும், தூயவராகவும் மாற்றுகின்றன (3: 1-18).
- இக்கடிதத்தின் இறுதியில் அனைவருக்கும் எழுச்சியுரை தரப்படுகிறது (4-5). உண்மையான மதம் (1:1-27), உண்மையான விசுவாசம் (2:1-3:12) மற்றும் உண்மையான ஞானம் (3:13-5:20) ஆகியவற்றின் மூலம் விசுவாச நடையை யாக்கோபு புத்தகம் கோடிட்டுக் காட்டுகிறது.
- இந்த புத்தகம் மத்தேயு 5-7ல் உள்ள இயேசுவின் மலைப்பிரசங்கத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு இணையாக உள்ளது.
- விசுவாச நடையின் ஒட்டுமொத்த பண்புகளை விவரிப்பதை யாக்கோபு தன் முதல் அதிகாரத்தில் தொடங்குகிறார். அதிகாரம் 2 மற்றும் 3 ன் தொடக்கத்தில் அவ செயலில் நம்பிக்கை பற்றி விவாதிக்கிறார். பின்னர் அவர் உலக ஞானத்திற்கும் தெய்வீக ஞானத்திற்கும் இடையிலான வேறுபாட்டை ஒப்பிட்டுப் பார்த்து, தீமையிலிருந்து விலகி தேவனிடம் நெருங்கி வரும்படி கேட்கிறார். பதுக்கி வைத்திருக்கும் பணக்காரர்களுக்கு கடுமையான கண்டனத்தை யாக்கோபு அளிக்கிறார். இறுதியாக அவர் விசுவாசிகளுக்கு துன்பத்தில் பொறுமையாக இருக்கவும், ஜெபிக்கவும், ஒருவரையொருவர் கவனித்துக்கொள்ளவும், கூட்டுறவு மூலம் நமது விசுவாசத்தை வலுப்படுத்தவும் ஊக்குவிப்பதோடு முடிக்கிறார்.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- யாக்கோபு புத்தகம் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்திற்கும் செயல்களுக்கும் இடையிலான உறவின் இறுதி விளக்கமாகும். மோசேயின் சட்டத்திலும் அதன் செயல் முறையிலும் வேரூன்றிய யூத கிறிஸ்தவர்களுக்கு யாக்கோபு எழுதினார். அவர் நியாயப்பிரமாணத்தின் செயல்களால் யாரும் நியாயப்படுத்தப்படுவதில்லை என்ற கடினமான உண்மையை விளக்குவதற்கு கணிசமான நேரத்தை செலவிட்டார் (கலா 2:16). பல்வேறு சட்டங்களையும் சடங்குகளையும் கடைப்பிடிக்க அவர்கள் தங்களால் இயன்றவரை முயற்சித்தாலும், அவ்வாறு செய்வது சாத்தியமற்றது என்றும், நியாயப்பிரமாணத்தின் மிகச்சிறிய பகுதியை மீறுவது அவர்களை அனைத்திற்கும் குற்றவாளிகளாக ஆக்கியது (யாக் 2:10) ஏனெனில் ஒரு பொருளின் ஒரு பகுதியை பகுதியை உடைப்பது அனைத்தையும் உடைக்கிறது என்பதைப்போல அவர் அவர்களுக்கு அறிவிக்கிறார். இயேசுவை விசுவாசிப்போர் தங்கள் விசுவாசத்தை செயல்களால் காட்டுவர்.

## நடைமுறைப் பயன்பாடு

- யாக்கோபு புத்தகத்தில் இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள சீஷர்களுக்கு "பேசுவதை மட்டும் பேசாமல்," "நடந்துகாட்டுக" என்ற ஒரு சவாலைக் காண்கிறோம்.
- யாக்கோபு 108 வசனங்களில் 60 கடமைகளை முன்வைத்ததால், பல கிறிஸ்தவர்கள் இந்த கடிதத்தை சவாலாகக் கண்டார்கள். மலைப் பிரசங்கத்தில் இயேசுவின் வார்த்தைகளின் உண்மைகளின் மீது அவர் கவனம் செலுத்துகிறார், மேலும் அவர் கற்பித்தவற்றின்படி செயல்பட நம்மைத் தூண்டுகிறார். ஒருவர் கிறிஸ்தவராக மாறலாம்,ஆனால் இன்னும் அவர் பாவத்தில் தொடர்ந்தும் வாழலாம், நீதியின் எந்தப் பலனையும் காட்டாமல் இருக்கலாம் என்ற கருத்தையும் இந்தக்கடிதம் பேசுகிறது.
- அத்தகைய விசுவாசம்" என்று யாக்கோபு அறிவிக்கிறார், "விசுவாசித்து நடுங்கும்" (யாக்கோபு 2:19) பேய்களைப் பற்றி குறிப்பிடப்படும் "விசுவாசம்" அவைகளை இரட்சிக்க முடியாது, ஏனென்றால் நற்செயல்களைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவிற்குள் உருவாக்கப்பட்டாம் (எபே 2:10). நல்ல செயல்கள் காரணமாக நமக்கு இரட்சிப்பு கிடைக்கவில்லை, மாறாக நல்ல செயல்கள் இரட்சிப்பின் விளைவு ஆகும்.

## நூலின் அமைப்பு


1) முன்னுரை (வாழ்த்து) 1:1
2) சோதனைகள் 1:2 - 18
3) அறிவுரைகளும் எச்சரிக்கைகளும் 1:19 - 5:20

GODDependence
தொகுப்பு: சகோ. டார்வின் நேசகுமார் ஏ.

# கன்னட வேதாகமத்தின் வரலாறும் தாக்கமும்

**போதகர். ஹொய்சய கவுடா**

[இது “கன்னட வேதாகமத்தின் வரலாறும் தாக்கமும்” என்ற தலைப்பில் 07 டிசம்பர் 2025 அன்று நடைபெற்ற GODependence கருத்தரங்கில், போதகர். ஹொய்சய கவுடா அவர்கள் வழங்கிய உரையின் எழுத்து வடிவம்]




## அறிமுகமும் தனிப்பட்ட சாட்சியும்

எனக்குக் கொடுக்கப்பட்ட இந்த வாய்ப்பிற்காக நான் தேவனைத் துதிக்கிறேன். இது ஒரு சிறந்த சந்தர்ப்பமும், மக்களுடன் பகிர வேண்டிய மிகவும் முக்கியமான தகவலுமாகும். இதற்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். நாம் பொதுவாக பல பிரசங்கங்களையும் சுவிசேஷப் பகிர்வுகளையும் செய்கிறோம், ஆனால் பரிசுத்த வேதாகமம் எவ்வாறு நமது மொழியில் வந்தது என்பதை நமது சொந்த சபை மக்களுக்கே அதிகமாக சொல்லியதில்லை. கன்னட வேதாகமத்தின் வரலாறும் தாக்கமும் பற்றி பேசுவதற்கான இந்த வாய்ப்பை வழங்கிய GODependence ஊழியத்திற்காக நான் தேவனைத் துதிக்கிறேன்.

நான் ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன், அங்கேயே ஊழியம் செய்து கொண்டிருந்தேன். ஒரு கொலை வழக்கின் காரணமாக மாண்டியா சிறையில் இருந்தபோது, சுவிசேஷம் அந்தச் சிறைக்கு வந்தடைந்தது. முதலில் சுவிசேஷம் ஆங்கிலத்தில் மாண்டியா சிறைக்கு வந்தது. பின்னர் அது ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து கன்னடத்திற்கும் மொழிபெயர்க்கப்பட்டது. 1998ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து வந்த ஜெர்ரி டக் என்ற பெண் மிஷனரி ஆங்கிலத்தில் பேசுவார், பத்மா முதலியார் அவர்கள் அதை தமிழில் மொழிபெயர்ப்பார், பின்னர் எஸ்.டி. சைமன் என்ற போதகர் தமிழிலிருந்து கன்னடத்திற்கு மொழிபெயர்ப்பார். இன்று தேவனுடைய கிருபையால், நமது சொந்த மொழிகளில் சுவிசேஷத்தை கேட்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது. இந்தச் சூழலில், கன்னட வேதாகமம் எவ்வாறு நமது கைகளுக்கு வந்தடைந்தது என்பதை சிறிது நேரம் பார்ப்போம்.

## வில்லியம் கேரி மற்றும் சேராம்பூர் மிஷனரிகளின் பணி

கன்னடத்தில் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் முதல் முயற்சியை சேராம்பூர் மிஷனரிகள் மேற்கொண்டனர், அதற்கு முக்கியமாக வில்லியம் கேரி தலைமையேற்றார். வில்லியம் கேரி நமது நாட்டிற்கு மிஷனரியாக வருவது எளிதான காரியம் அல்ல. அவருக்கு மனைவியும் நான்கு குழந்தைகளும் இருந்தனர். 1800களில் விமானங்கள் எதுவும் இல்லை, ஆறு மாதங்கள் கப்பலில் பயணம் செய்ய வேண்டியிருந்தது. அந்தப் பயணத்தின் போது அவருடைய இளைய குழந்தை இறந்துவிட்டது. இந்தியா வந்தடையும் வரை உடலை பாதுகாக்க குளிர்சாதன

மரித்துப் போன ஆத்துமாக்களை உயிர்பெறச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் மாபெரும் கருவி தேவனுடைய வார்த்தை. - டி.எல் மூடி

வசதிகள் எதுவும் இல்லை, மேலும் கப்பல் அவர்களுக்காக மட்டும் திரும்பிச் செல்ல முடியாது. அவர்கள் ஜெபித்து, குழந்தையின் உடலை கடலில் ஒப்படைத்து இறுதிச்சடங்குகளை நடத்த வேண்டியிருந்தது.

கொல்கத்தாவை வந்தடைந்த பிறகு, உணவு மற்றும் சூழல் மாற்றத்தால் குடும்பம் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு உணவு நிலைமை மிகவும் கடினமாக இருந்தது. அங்குள்ள உணவுக்கு உடல் ஒத்துழைக்காததால், மீதமிருந்த மூன்று குழந்தைகளும் இறந்துவிட்டனர். இறுதியில், அவருடைய மனைவி மனநிலை பாதிப்புக்குள்ளானார். இத்தகைய துன்பங்களுக்கிடையிலும் கேரி தமது ஊழியத்தை கைவிடவில்லை. அவருக்கு உதவி செய்து வந்த அமைப்பு பணத்தை நிறுத்தியபோது, அவர் செருப்பு தைத்து வாழ்வு நடத்தினார். பின்னர் நீலச்சாய தொழிற்சாலையில் வேலை செய்ததுடன், குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கவும் தொடங்கினார்.

இதன் மூலம் அவர் இந்தி, மராத்தி, பெங்காலி உள்ளிட்ட பல மொழிகளை கற்றுக்கொண்டார். பின்னர் வில்லியம் வார்ட் மற்றும் ஜோஷுவா மார்ஷமன் போன்றோர் அவருடன் இணைந்தனர். அவர்கள் வேதாகமத்தை இந்திய மொழிகளுக்கு மொழிபெயர்க்கும் பணியை ஆரம்பித்தனர். கேரி சுமார் 18 இந்திய மொழிகளை வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டு, அவற்றில் வேதாகமத்தின் பகுதிகளை மொழிபெயர்த்தார், அதில் கன்னடமும் ஒன்று. ஒரு கட்டத்தில், மனநிலை பாதிக்கப்பட்டிருந்த அவரது மனைவி அச்சகத்திற்கும் மொழிபெயர்க்கப்பட்ட பிரதிகளுக்கும் நெருப்பு வைத்தார். இதை நான் குறிப்பிடுவதன் காரணம், நமது மொழியில் உள்ள வேதாகமம் எளிதில் கிடைத்ததல்ல, அது மிகுந்த போராட்டத்தினாலும் தியாகத்தினாலும் கிடைத்தது என்பதை உணர்த்துவதற்காக.

### ஜான் ஹேன்ட்ஸ் மற்றும் பெல்லாரி மிஷன்

பின்னர் லண்டன் மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த ஜான் ஹேன்ட்ஸ் பெல்லாரிக்கு வந்தார். வில்லியம் ரீவ் அவர்களுடன் சேர்ந்து பெல்லாரி, மைசூர் மற்றும் பெங்களூரில் பணியாற்றினர். 1820ஆம் ஆண்டளவில் கன்னட புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பு முடிவடைந்து வெளியிடப்பட்டது. மொழிபெயர்ப்பிலும் எழுத்துப்பிழைகளிலும் தவறுகள் இல்லாதபடி உறுதிசெய்ய பெரிய குழு அமைக்கப்பட்டது. சில சமயங்களில் ஒரு வரியையோ ஒரு சொல்லையோ இறுதியாக அச்சிடுவதற்கு முன் 10 முதல் 20 பேர் வரை சரிபார்த்தனர். அதனால் இந்தப் பணி பல ஆண்டுகள் எடுத்தது.

ஜான் ஹேன்ட்ஸ் முதலில் ஸ்ரீரங்கப்பட்டணத்தில் அச்சகத்தை அமைக்க விரும்பினார். அப்போது பிரிட்டிஷாரை விட போர்ச்சுகீசியர்கள் மிஷனரி பணிக்கு அதிக ஆதரவு அளித்ததால் அங்கு அது சாத்தியமாகும் என நினைத்தார். ஆனால் மைசூர் அரசர்களும் அப்போது ஸ்ரீரங்கப்பட்டணத்தை ஆட்சி செய்த திப்பு சுல்தானும் இடையே நடைபெற்ற போர்களின் காரணமாக அனுமதி மறுக்கப்பட்டது. அதன் விளைவாக அச்சகம் வட கர்நாடகத்தின் பெல்லாரிக்கு மாற்றப்பட்டது. அங்கேயே பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் மொழிபெயர்ப்பு பணி நிறைவு பெற்றது.

நாம் வேறு எவ்விதத்திலும் கற்றுக் கொள்ள முடியாதவைகளைக் குறித்து பரிசுத்த வேதாகமம் நமக்குக் கூறுகிறது: நாம் எப்படிப்பட்டவர்கள், நாம் யார், நாம் எப்படி இங்கு வந்தோம், நாம் ஏன் இங்கு இருக்கிறோம், மற்றும் நாம் இங்கு இருக்கும்போது செய்ய வேண்டியது என்ன என்பன போன்ற பல விஷயங்களை வேதம் நமக்குக் கூறுகிறது. - A W டோசர்

1810 முதல் 1819க்குள், மிஷனரிகள் பெல்லாரி மற்றும் மைசூரில் ஏழு பள்ளிகளை நிறுவி, ஒவ்வொன்றிலும் சுமார் 300 குழந்தைகளுக்கு கல்வி வழங்கினர். இந்தப் பள்ளிகளில் அடிப்படை கல்வியுடன் வேதாகமமும் கற்பிக்கப்பட்டது.

### கன்னட மொழியின் வரலாறும் நவீன பதிப்புகளும்

வரலாற்று ரீதியாக, அமோகவர்ஷ ந்ருபதுங்க மன்னர் ஹால்மிடி கல்வெட்டின் மூலம் கன்னட மொழிக்கான அடித்தளத்தை அமைத்தவர் எனக் கருதப்படுகிறார். பின்னர் சோழர்கள், கிருஷ்ணதேவராயர் போன்ற விஜயநகர அரசர்கள் மற்றும் ஹொய்சளர்களின் காலங்களில் மொழி வளர்ச்சி பெற்றது. ஆரம்பத்தில் பழைய கன்னடமாக இருந்த மொழி, கெம்பேகவுடா மற்றும் மைசூர் வோடேயார் ஆட்சிக் காலத்தில் நவீன வடிவத்தைப் பெற்றது.

மிஷனரிகள் வெறும் வேதாகமங்களை மட்டும் அச்சிடவில்லை, கன்னட செய்தித்தாள்கள், இதழ்கள், அலுவலக ஆவணங்கள், பில் புத்தகங்கள், நிகழ்ச்சி நிரல்கள் போன்றவற்றின் வளர்ச்சிக்கும் அவர்கள் உதவினர். இன்று கன்னட வேதாகமத்தின் பல "எளிய பதிப்புகள்" உள்ளன. ஆனால் அவை சில சமயங்களில் குழப்பத்தையும், அசல் அர்த்த இழப்பையும் ஏற்படுத்துகின்றன. இந்திய வேதாகமச் சங்கம் (BSI) வெளியிட்ட முதன்மை மொழிபெயர்ப்பே இன்று மிகவும் விரும்பப்பட்டு பரவலாகப் பயன்படுத்தப்படும் பதிப்பாக உள்ளது. சில வார்த்தைகள் கடினமாகத் தோன்றினாலும், அவற்றைக் கற்றுக்கொள்வது வேதாகமத்தை சரியாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.

### கேள்வி - பதில்கள் மற்றும் நிறைவு உரை

"இன்றைய காலத்தில் ஏன் குறைவான மக்கள் வேதாகமத்தை வாசிக்கிறார்கள்?" என்ற கேள்விக்கு அவர் பதிலளித்ததாவது: "சபைகளும் குடும்பங்களும் வேதாகம வாசிப்பிற்கு போதுமான முக்கியத்துவம் கொடுக்காததே அதற்குக் காரணம் என நான் நம்புகிறேன். குழந்தைகளுக்கு பள்ளியில் ஆறு பாடங்கள் உள்ளன என்று நாம் சொல்கிறோம், ஆனால் வேதாகமம் அவர்களின் 'ஏழாவது பாடமாக' இருக்க வேண்டும். அதை வாசிப்பதன் நன்மைகளை நாம் அவர்களுக்கு விளக்க வேண்டும்."

இதற்கு மற்றொரு பங்கேற்பாளரான போதகர் ஐசக் அவர்கள், "இப்போது வேதாகமங்கள் பெரும்பாலும் இலவசமாக வழங்கப்படுவதால், மக்கள் அதற்கு முன்பிருந்த அளவுக்கு மதிப்பு கொடுக்கவில்லை, பணம் கொடுத்து வாங்கிய காலத்தில் அது அதிக மதிப்புடையதாக இருந்தது" என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சி நிறைவில், GODependence ஊழியம் 10 மொழிகளில் பல்வேறு காலஅட்டவணைகளுடன் வேதாகம வாசிப்பு சவால்களை நடத்தி வருவதாக நினைவூட்டப்பட்டது. இறுதியாக, மலவள்ளியைச் சேர்ந்த போதகர் முரளி மார்க் அவர்கள் நிறைவுஜெபம் செய்யும்போது, ஆரம்பகால மிஷனரிகளின் தியாகங்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தியும், கர்நாடகத்தில் தேவ வார்த்தையின் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்றும் ஜெபித்தார்.

**-(போதகர். ஹொய்சய கவுடா)**

(கன்னட வேதாகம மொழிபெயர்ப்பு பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அனுப்புங்கள்... அடுத்த மாத இதழில் இக்கட்டுரை ஆசிரியர் பதிலைப் பகிர்ந்துகொள்வார்)



அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார்; அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது. - சங்கீதம் 147:15

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என்னுடைய பெயர் ஸ்நேகா. நான் தமிழ்நாட்டின் விருதுநகரைச் சார்ந்தவள். நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்டேன். என் பெற்றோர் ஊழியத்தில் ஈடுபட்டுள்ளனர். சிறு வயதிலிருந்தே தேவனுடைய வார்த்தை எங்களுக்கு மிகவும் பரிச்சயமாக இருந்தது, எங்கள் வீட்டில் வேதாகம வாசிப்பு மிகவும் ஊக்குவிக்கப்பட்டது. தேவனுடைய கிருபையால், 8 வயதில் நான் இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன்.

**இதுவரை நீங்கள் முழு வேதாகமத்தையும் எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்? அதில் எத்தனை முறை GODependence திட்டத்தின் மூலம்?**

நான் வேதாகமத்தை தொடர்ந்து வாசித்து வந்திருந்தாலும், ஒரு வருடத்திற்குள் அல்லது சில மாதங்களுக்குள் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க முடியவில்லை. பொதுவாக அதை முடிக்க பல ஆண்டுகள் எடுத்துக்கொண்டது. ஆனால் GODependence திட்டத்தின் மூலம், தேவனுடைய கிருபையால், கடந்த இரண்டு ஆண்டுகளாக முழு வேதாகமத்தையும் ஆரம்பம் முதல் முடிவு வரை வாசித்து முடித்துள்ளேன். தற்போது, ஒரு வருட வேதாகம வாசிப்பு திட்டத்தை பின்பற்றும் எனது மூன்றாவது வருடமாகும்.

**GODependence திட்டத்தின் மூலம் வேதாகம வாசிப்பில் எப்படி ஆர்வம் உருவானது?**

ஒரு வருடத்திற்குள் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க வேண்டும் என்ற ஆவல் எனக்குள் இருந்தது. அப்போது தான் GODependence திட்டத்தைப் பற்றி அறிந்தேன். அவர்களின் வேதாகம வாசிப்பு திட்டத்தைப் பற்றி கேட்டபோது, அந்த WhatsApp குழுவில் இணைந்து அந்த அட்டவணையைப் பின்பற்றும்படி கர்த்தர் என்னை வழிநடத்துகிறார் என்று உண்மையாக உணர்ந்தேன்.

இந்த திட்டம் எனக்கு வேதாகமத்தை தொடர்ந்து வாசிக்க உதவியது மட்டுமல்லாமல், தேவனுடைய வார்த்தையை ஆழமாக தியானிக்கவும் உதவியது. ஒவ்வொரு அதிகாரமும் எனக்கே தனிப்பட்ட முறையில் பேசுவது போல இருந்தது. பல நேரங்களில், வேத வசனங்கள் என் வாழ்க்கை சூழ்நிலைகளுக்கும், நாங்கள் ஜெபித்து ஊழியம் செய்து வந்த மக்களின் தேவைகளுக்கும் நேரடியாக பொருந்தியது.

ஒவ்வொரு நாளும், தேவன் தமது வார்த்தையின் மூலம் என்னிடம் என்ன பேசப்போகிறார் என்ற எதிர்பார்ப்புடன் வேதாகம வாசிப்பு பகுதிகளை ஆவலுடன் எதிர்நோக்குவேன். குழுவினரால் பகிரப்பட்ட தினசரி வேத வசனங்கள், ஜெபக் குறிப்புகள், தியானங்கள் எனக்கு மட்டுமல்ல, என்னைச் சுற்றியிருந்த பலருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தன. சிறிய மற்றும் குறிப்பிட்ட ஜெபக் குறிப்புகள் கூட நான் எங்கு இருந்தாலும் உடனடியாக ஜெபிக்க உதவின.

குழுவினரால் பகிரப்பட்ட மாத இதழ்கள், வினாடி வினா போட்டிகள் மற்றும் பல்வேறு செயல்பாடுகளும் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. குறிப்பாக என் பிள்ளைகளும் நண்பர்களும் அவற்றின் மூலம் ஊக்கமடைந்து ஆவிக்குரிய வளர்ச்சியை பெற்றனர்.

### இப்போது உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள்:

இந்த வேதாகம வாசிப்பு பயணத்தின் மூலம் என் ஆவிக்குரிய வாழ்க்கை மிகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து வாசிப்பதிலும், என் அன்றாட வாழ்க்கையில் அவருடைய வழிநடத்துதலை உணர்வதிலும் நான் அதிக கவனமுடையவளாக மாறியுள்ளேன். வேதவசனங்களின் மூலம் தேவன் என்னோடு பேசுவதையும், வழிநடத்துவதையும், அறிவுறுத்துவதையும் தெளிவாக அனுபவிக்கிறேன்.

என் பிள்ளைகளும் தினமும் வேதாகமம் வாசிக்க ஊக்கமடைந்தது மிகப்பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்றாகும். தேவனுடைய கிருபையால், எனக்கும் என் கணவருக்கும் 11, 9 மற்றும் 5 வயதுடைய மூன்று பிள்ளைகள் உள்ளனர், அவர்கள் அனைவரும் தொடர்ந்து வேதாகமத்தை வாசித்து வருகின்றனர். என் இரண்டாவது மகன் 2025ஆம் ஆண்டில் ஒரு வருடத்திற்குள் முழு வேதாகமத்தையும் வாசித்து முடித்தான். இது எங்கள் குடும்பத்திற்கு ஒரு பெரிய ஊக்கமும் சாட்சியுமாக உள்ளது.

### இறுதியாக, சில வரிகளில் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

தேவனுடைய வார்த்தையை பரப்புவதில் அர்ப்பணிப்புடனும் உண்மையுடனும் உழைத்து வரும் GODependence குழுவினருக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஊழியம் உண்மையாகவே என் வாழ்க்கையையும் என் பிள்ளைகளின் வாழ்க்கையையும் பாதித்துள்ளது. குறிப்பாக இளைஞர்களும் மாணவர்களும் GODependence வேதாகம வாசிப்பு திட்டங்களில் இணைவதை நான் வலியுறுத்தி பரிந்துரைக்கிறேன். எல்லா தலைமுறையினரும், வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் உள்ள மக்களும் தேவனுடைய வார்த்தையில் வளர இந்த ஊழியத்தை தேவன் தொடர்ந்து பயன்படுத்துவார் என்று நான் நம்புகிறேன்.

உலகம் முழுவதும் சுவிசேஷத்தை பரப்பி வரும் இந்த குழுவினரை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக. கர்த்தருக்கே மகிமை. நன்றி.

## சாட்சி - சகோதரி. மார்ஸ்னா ஷீபாராணி.⭐⭐⭐⭐⭐

### உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:

அனைவருக்கும் வணக்கம். என்னுடைய பெயர் மார்ஸ்னா ஷீபாராணி. நான் ஒரு ரோமன் கேத்தலிக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். சிறு வயதிலிருந்தே பாரம்பரிய கிறிஸ்தவ வழக்கங்களில் வளர்ந்தேன். ஆரம்பத்தில் வேதத்தை ஆழமாக அறிந்திருக்கவில்லை. பின்னர் வேலைக்காக சென்னை சென்றபோது தேவன்என்னைத் தொட்டு, வேதத்தின் முக்கியத்துவத்தை உணர வைத்தார்.

**நீங்கள் இதுவரை முழு பைபிளையும் எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்? அதில் எத்தனை முறை GODependence திட்டத்தின் மூலம்?**

நான் இதுவரை முழு பைபிளையும் இரண்டு முறை வாசித்திருக்கிறேன். முதல் முறை கோயம்புத்தூரில் உள்ள Comfort Church மூலம் மூன்று மாத திட்டத்தில் வாசித்தேன். இரண்டாவது முறை GODependence திட்டத்தின் மூலம் ஆறு மாதங்களில் முழு வேதாகமத்தையும் வாசித்தேன்.

**GODependence திட்டத்தின் மூலம் வேதாகமம் வாசிக்க எப்படி ஆர்வமாக இருந்தது?**

GODependence திட்டத்தை என் நண்பர் மூலம் அறிந்து கொண்டேன். இந்த திட்டத்தில் வேதத்தை அவசரமாக அல்லாமல், ஆழமாக தியானித்து வாசிக்க முடிந்தது. ஒவ்வொரு வசனத்திலும் இருக்கும் சத்தியங்களை புரிந்து கொள்ள தேவன் எனக்கு கிருபை தந்தார். அதனால் வேதாகமத்தை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற வாஞ்சை எனக்குள் உருவானது.

**இப்போது உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள்:**

வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்த பிறகு என் வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. முன்பு “நான் செய்கிறதே சரி” என்ற எண்ணத்தில் இருந்தேன். ஆனால் வேதத்தை வாசித்தபின், தேவனுடைய சித்தத்தின்படி நடக்க வேண்டும் என்பதை கற்றுக்கொண்டேன். என் வாழ்க்கையில் சமாதானம், தெளிவு, கீழ்ப்படிதல் ஆகியவை அதிகரித்தது. மேலும், தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் முடிவெடுக்க கற்றுக்கொண்டேன். அதோடு, தேவன் எனக்கு முழுக்கு ஞானஸ்நானம் பெறவும் வழிநடத்தினார்.

**GODependence குழுவின் முறை உங்களுக்கு எவ்வாறு உதவியது?**

GODependence குழுவின் முறை மிகவும் உதவியாக இருந்தது. வேதத்தை மெதுவாகவும் ஆழமாகவும் வாசிக்க இந்த திட்டம் உதவியது. ஒவ்வொரு நாளும் ஒழுங்காக வாசிப்பதற்கும், தியானிப்பதற்கும் பழக்கப்படுத்தியது. வேதத்தின் மூலம் தேவன் என்னோடு பேசும் அனுபவத்தையும் உணர வைத்தது. இதன் மூலம் என் ஆவிக்குரிய வாழ்க்கை வளர்ச்சியடைந்தது.

**இறுதியாக, சில வரிகளில் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வேதாகமம் என்பது ஒரு புத்தகம் மட்டும் அல்ல, அது நம்முடைய வாழ்க்கையை மாற்றும் தேவனுடைய ஜீவ வார்த்தை. நாம் வேதத்தை வாசிக்கும் போதுதான் தேவனை உண்மையாக அறிந்து கொள்ள முடியும். அனைவரும் தினமும் வேதாகமத்தை வாசித்து, தேவனுடைய சித்தத்தின்படி வாழ வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. நன்றி.

# சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்கள் 2025-26

## மனன வசனப் போட்டி - பருவம் 3

2025-26 கல்வியாண்டுக்கான சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்கள் 2026 பிப்ரவரி மாத இறுதியுடன் நிறைவு பெற்றன. பருவம் 3 க்கான மனன வசனப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களின் வீடியோக்கள் நமது Youtube சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.



R Lakeesha



Jeshurun Roy Daniel



C V Joanna Jessica


J. J.Jerolin Esther Margaret




James santhosh



M.Jerson Jebaraj



U. Miraclin Jessy



Ajoy steven



Alvina Terrin

## 2026-2027 கல்வியாண்டுக்காக சிறுவர் வேதவாசிப்பு சவால்கள்

GODependence கடந்த 3 கல்வியாண்டுகளாக சிறுவர்களுக்கான வேதவாசிப்பு சவால்களை நடத்தி வருகிறது. 2026–27 புதிய கல்வியாண்டில் இது மீண்டும் 08 ஜுன் 2026 திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது.

மேலும் கூடுதல் விவரங்கள் வேதவாசிப்பு சவால் குழுக்களிலும் அடுத்த செய்திமடலிலும் பகிரப்படும்.

பரிசுத்த வேதாகமத்தை விசுவாசிக்கும் போது மோசமான வடிவங்களிலுள்ள மனச்சோர்வுகளும் குணமாகும். - சார்லஸ் ஸ்பர்ஜன்

## GODependence நிகழ்வுகள்

### 1

### மே 2026 ல் தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சிகள் (Bible Readathons)




2026 ஏப்ரல் 25 சனிக்கிழமை பிற்பகல் 2:00 மணி முதல் 6:00 மணி வரை (இந்திய நேரம்) தன்னார்வலர்களின் உற்சாகமான பங்கேற்புடன் தெலுங்கு மொழியில் Bible Readathon நடைபெற்றது.

இந்த மாதத்திலும், 2026 மே 30 சனிக்கிழமை பிற்பகல் 2:00 மணி முதல் 6:00 மணி வரை (இந்திய நேரம்) தெலுங்கு மொழியில் Bible Readathon நடைபெற உள்ளது.

நல்ல இணைய வசதியுடன், தெலுங்கில் சரளமாக வேதாகமம் வாசிக்கக் கூடியவர்களை இந்த நிகழ்வில் பங்கேற்க அன்புடன் அழைக்கிறோம்.




மேலும், தமிழ் மொழியில் Bible Readathon 2026 மே 28 வியாழக்கிழமை பிற்பகல் 2:00 மணி முதல் 6:00 மணி (இந்திய நேரம்) வரையும் மற்றும் ஆங்கில மொழியில் Bible Readathon 2026 மே 26 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2:00 மணி முதல் 6:00 மணி (இந்திய நேரம்) வரை யும் நடைபெறும்.

நல்ல இணைய வசதியுடன், சம்பந்தப்பட்ட மொழிகளில் சரளமாக வேதாகமம் வாசிக்கக் கூடியவர்களும் இந்த நிகழ்வுகளில் பங்கேற்கலாம்.




### 2

### GODependence கருத்தரங்கு - மே 2026



**தலைப்பு: தேவனுடைய வார்த்தையை தியானிக்கும் முறைகள்**

(தேவனுடைய வார்த்தையை தியானிக்கும் பல்வேறு முறைகளை ஆராயும் ஆழமான மற்றும் கலந்துரையாடலுடன் கூடிய ஒரு சிறப்பு குழு விவாதம்... இதில் பங்கேற்பவர்கள் தேவனுடைய வார்த்தையை நடைமுறையில் எவ்வாறு தியானிக்கலாம் என்பதை அறிந்து கொண்டு, வேதாகம தியானக் குழுக்களில் (Bible Meditation Groups - BMGs) ஒன்றில் இணைந்து தொடர்ந்து தியானப் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள முடியும்.)

**நாள்:** 24 மே 2026 ஞாயிற்றுக்கிழமை இந்திய நேரம் மாலை 6:00 முதல் 7:30 வரை

**கருத்துரை:** GODependence குழுவினர்

### வேத தியான குழுக்கள் (BMG)

இந்த கருத்தரங்கு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, வேதாகம தியானக் குழுக்களில் இணைய விருப்பமுள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மேலும் கூடுதல் விவரங்கள் வேதாகம வாசிப்பு சவால் குழுக்களிலும் அடுத்த மாத செய்திமடலிலும் பகிரப்படும்.


FOLLOW US!
GODependence வேதவாசிப்பு சவால்கள்
+965 6596 2559
GODependence - தமிழ்
GODependence - தமிழ்
GODependence - தமிழ்
GODependence
GODependence

தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.


பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு வசனமானது நான் வாசித்த எல்லா புத்தகங்களைக் காட்டிலும் அதிகமாக எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. - இம்மானுவேல் காண்ட்